பக்கங்கள்:-26
# காலை முரசு
முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 17 | ஞாயிற்றுக்கிழமை | 03.11.2024 | அதிர்வு 93

## வடக்கு, கிழக்கில் 6ஆம் திகதி முதல் மழை தீவிரமடையும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் மழை தீவிரமடையும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப்

05




# மாவீரர்களின் கட்சியான தமிழரசு அழிந்துபோக இடமளியாதீர்கள்!

## அதிக ஆசனங்களைப் பெற ஆணை வழங்குங்கள் என்று தமிழ் மக்களிடம் சி.வி.கே. வேண்டுகோள்

(பிரபாகரன் டிலக்சன்)

"தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தவர்களில் 90 வீதமானவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். போராட்டத்திலே தங்களை ஆகுதியாக்கியவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்காரர்கள். அந்தத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் அழிந்துவிடும் என்று சிலர் சொல்கின்றார்கள். இவர்கள் மனச்சாட்சியுடன்தான் சொல்கின்றார்களா என்று தெரியவில்லை."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

05



# தேசிய மக்கள் சக்தியே வெற்றிவாகை சூடும்!

## அடித்துக் கூறுகின்றார் எஸ்.பி.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி இலகுவில் சாதாரணப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் போன்ற தேசிய மட்ட தேர்தல்களால் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் பெரிதாகக் கவனம் செலுத்தப்படவில்லை.

05




1977 முதல் 2015 வரை அம்பாறை தேர்தல் தொகுதி மற்றும் அம்பாறை மாவட்டம் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பிரதிநிதித்துவம் செய்த முன்னாள் அமைச்சர் பி. தயாரத்ன, அமைச்சர் என்ற முறையில் தான் பயன்படுத்திய அரச விடுதியை 45 ஆண்டுகளின் பின்னர் கடந்த 31ஆம் தேதி அம்பாறை மாவட்டச் செயலகத்திடம் கையளித்திருக்கிறார்.

அம்பாறையில் திகாமினி மாவத்தையில் உள்ள இந்த விடுதியைத் தான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் முதல் அரசாங்கம் வழங்கிய விடுதியாக அவர் பயன்படுத்தி வந்தார்.

2015இல் பதவி இழந்த அவர் 9 ஆண்டுகள் கழித்து இப்போது புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் அதனை கையளித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

+ + +

இன்று ஞாயிற்றுக்கிழமை கட்டுரை வரைந்துள்ள பத்தி எழுத்தாளர் ஒருவர், இலங்கையில் தமிழர்களின் தேசியத்திற்காகக்

05



# கற்கோவளம் இரட்டைக்கொலை: மூன்றாவது சந்தேகநபரும் கைது!

## குடத்தனை இரட்டைக் கொலைகளிலும் அவர்களில் ஒருவர் பிரதான சந்தேகநபர்

யாழ். வடமராட்சி, பருத்தித்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய மூன்றாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களில் ஒருவர், 2019ஆம் ஆண்டு குடத்தனையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கற்கோவளம் ஜே/406 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்துவந்த மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது 54) என்ற சலவைத் தொழிலாளியும், அவரது மனைவியான மேரி றீற்றா (வயது 53) என்பவரும் சித்திரவதை செய்யப்பட்டு கல்லால் குத்திக் கொல்லப்பட்டிருந்தனர்.

பிரதான சந்தேகநபர்களாக மூவர் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். ஒருவர் தலைமறைவாகியிருந்த நிலையில் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதீத குடிவெறி மற்றும் தொழில் போட்டியால் பழிவாங்கும் குரோத உணர்வு என்பவற்றாலேயே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.











# தமிழ்ச்செல்வனின் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேத்தல் நிகழ்வில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட ஏனைய வேட்பாளர்கள், கட்சி உறுப்பிர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# மக்களின் அபிலாஷைகளை ஜனாதிபதி சிதைத்துள்ளார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

பாட்டாளி வர்க்கம் என்று கூறிக்கொள்ளும் ஜனாதிபதி எரிபொருள் விலை திருத்தத்தில் முதலாளித்துவ வர்க்கத் திற்குச் சலுகைகளை வழங்கியுள்ளார் என ஐக்கிய மக் கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கிய தற்போதைய ஜனாதிபதி மக்களின் எதிர்பார்ப்புகளை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தார்.

மின் கட்டணத்தை 66 சதவீதம் குறைக்கலாம் என்று தெரிவித்தார்.

உணவுப்பொருள்களின் விலையையும் குறைப்பதாகக் கூறியிருந்தார்.

ஆட்சிக்கு வந்தும் அவர் கூறியவாறு அதனைக் குறைக்க வில்லை. இவற்றைச் செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பி னர்களின் ஒப்புதல் தேவையில்லை.

அதிக ஊழல் காரணமாகவே மின் கட்டணம் அதிக ரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் பெரும்பாலான பிரச்சினைகளை விரைவில் தம்மால் தீர்க்க முடியும் என்றும் கூறினார்.

எனினும், ஆட்சிக்கு வந்து இன்று வரை அவரால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை.

தேர்தல் காலப்பகுதியில் மக்களின் எதிர்பார்ப் புகளை உச்சத்துக்குக் கொண்டு வந்து, இன்று ஆட் சிக்கு வந்தும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றாது, மக்கள் அபிலாஷைகளை சிதைத்துள்ளார்.” – என்றார்






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குரல் எழுப்பும் பிரதான கட்சி என்று குறிப்பிடப்படும் தமிழரசுக் கட்சி தன்னுடைய தேர்தல் பிரசார போஸ்டர்களில் கட்சியின் தலைவர் என்று ஒருவருடைய படத்தை போட முடியாத வக்கற்ற நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பது போல கட்சியின் தலைவராக இருந்த போது கட்சிக்குள் குழப்பங்கள், இழுபறிகள் நீடிப்பதற்கு காரணமாக இருந்த மாவை சேனாதிராஜா, இப்போது கட்சியின் தலைமைப் பதவியைத் தாம் துறந்துவிட்டார் என அறிவித்த பின்னரும், அதே குழப்பத்தை கட்சியின் தலைமை விடயத்தில் நீடிக்க வழி செய்து, இரண்டும் கெட்டான் நிலையில் கட்சியை அவலப்பட வைத்து நிற்கிறார் என்பதுதான் தமிழரசின் பெரும் துரதிர்ஷ்டம் ஆகும்.

கட்சியின் தேசிய மாநாட்டை பல வருடங்கள் நடத்தாமல் இழுத்தடித்து, அதன் பின்னர் நடந்த தேசிய மாநாட்டிற்கும் தலைவர் என்ற முறையில் தகுதியற்றவர்களை எல்லாம் பொதுக்குழுவுக்குக் கூட்டி வந்து அந்த தேசிய மாநாட்டை வழக்கில் சிக்க வைத்த பெருமை அவரையே சேரும்.

அதனால் கட்சியின் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தும் அவரே நீடிக்கும் அவலம் தொடரும்போது, திடீரென கட்சியின் தலைமைப் பதவியைத் தான் துறக்கின்றார் என அறிவித்தல் விடுத்தார். அந்த அறிவித்தலை கூட முறைதலையாக செய்யாமல், கட்சிக்கு ஒரு தலைவர் இருக்கிறார், இல்லை என்ற குழப்ப நிலைக்குள் கட்சியை வைத்துத் தமது குசும்புத்தனத்தை அவர் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்வதான அவரது நடிப்பு, இது இரண்டாவது தடவை.

ஏற்கனவே ஒரு தடவை ராஜினாமாக் கடிதத்தை கொடுத்துவிட்டு தலைவர் பதவியை விட்டு விடாமல் இறுகப் பற்றி கொண்டிருந்த பதவி ஆசை வீரர் அவர்.

இப்போதும் கூட தம் இஷ்டப்படி வேட்பாளர் தெரிவை செய்ய இயலாத வக்கற்ற பதவி நிலையில் தான் இருப்பதை நன்கு உணர்ந்து கொண்டு, அதற்குப் பிரதிபலிப்பாக தலைவர் பதவி ராஜினாமா நாடகத்தை மீண்டும் ஒரு தடவை அவர் அரங்கேற்றினார்.

ஆனால் ஐம்பது வருடங்களாக அரசியலில் இருக்கும் அவருக்கு - பழமையான தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை நீண்ட காலம் பற்றிப் பிடித்து, அதில் சுகம் கண்டு கொண்டிருக்கும் அவருக்கு - கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்கின்ற அடிப்படை முறைமை கூட தெரிந்திருக்கவில்லை என்பதுதான் பேரவலம்.

அவ்விடயத்தில் அவர் நடத்திய கோமாளித்தனத்தை ஏற்கனவே இப்பத்தியில் விவரித்திருக்கிறேன்.

நீதிமன்ற உத்தரவுக்கு மாறாக, சிறிதரனைக் கட்சித் தலைமையை ஏற்குமாறு கோரி அவருக்கு தமது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்துக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார் மாவை.

தலைவர் பதவி தொடர்பான தமது ராஜினாமாக் கடிதத்தை முறைப்படி செயலாளருக்கு அனுப்பாமல், வேறுவிதத்தில் ராஜினாமா நாடகத்தை அவர் நடத்தியதால், அவர் இப்போது கட்சித் தலைவரா, இல்லையா என்ற நிலைமை குழப்பமாக இன்னும் நீடிக்கிறது.

ராஜினாமா செய்கிறார் எனப் பகிரங்கமாக அறிவித்த பின்னரும், இன்னமும் கட்சித் தலைவராக பல சமயங்களில் அவர் நடந்து கொள்ள முயற்சிப்பது வெட்கம், ரோஷம், மானம் இல்லாத அவரது பண்பியல்பை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றது.

பாவம் தமிழரசு கட்சி...! அவரை உறுப்பினராகவும் தலைவராகவும் வைத்திருந்த குற்றத்துக்காக அது இன்னும் எவ்வளவு காலத்துக்கு தலைவர் இல்லாமல் அல்லாடப் போகின்றதோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.....!

சுகவீனமாகி கட்சிப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு இருக்கும் இந்த சமயத்தில் கூட, கட்சி தன்னுடைய யாப்புக்கு அமைய உரியவர் மூலம் கட்சித் தலைமைப் பொறுப்பை நிர்வகிக்க இடம் அளிக்காமல், தமது பதவி ஆசை கருதி, 12 வருடங்களுக்கு மேலாகவும் அதில் ஒட்டிக் கொண்டிருக்கிறார் அவர் என்பதுதான் வெளிப்படையான உண்மை.

கட்சியை உண்டு, இல்லை என்று அழித்துவிட்டுத் தான் இந்த மனிதர் பதவியை கையளிப்பார் என்று தோன்றுகின்றது.

பாவம் தமிழரசு...!

---

## மாவீரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குச் சி.வி.கே. சிவஞானம் தலைமை தங்கி உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியை மட்டும் குறிவைத்து பல விமர்சனங்கள், பல கண்டனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றையெல்லாம் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைப்பிலே இவ்வாறு செய்கின்றார்கள். எங்களோடு இருந்தவர்களும் எங்களுக்கு எதிராக இப்போது செயற்படுகின்றார்கள். எங்களோடு இருந்து ஆசனப்பங்கீட்டில் அதிர்ப்தியடைந்து வெளியேறியவர்கள் வேறு அணிகளில் போட்டியிடுகின்றார்கள்.

அப்படி வெளியேறியவர்களில் ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலோடு அழிந்துவிடும் என்று சொல்கின்றார்கள். அவர்களுடைய கருத்தைத் தமிழ் மக்கள் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த அரசியல் முன்னெடுப்பிலே முன்னிலையாக நிற்பது இலங்கைத் தமிழரசுக் கட்சியே ஆகும்.

அந்தக் கட்சி அழிந்து விடும் என்றால் நாங்கள் இதுவரையில் கடந்து வந்த பாதையும், அஹிம்சை வழியாகவும், ஆயுத வழியாகவும் நாங்கள் போராடிய போராட்டங்களின் வரலாறும் மூழ்கடிக்கப்பட்டுவிடும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலே இணைந்தவர்களில் 90 வீதமானவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். போராட்டத்திலே தங்களை ஆகுதியாக்கியவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்காரர்கள். அந்தத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் அழிந்துவிடும் என்று சிலர் சொல்கின்றார்கள். தமிழரசுக் கட்சி ஒரு தனி மனிதனின் கட்சியல்ல. பல வரலாற்றுத் தலைவர்களை வழங்கிய கட்சி. அப்படிப்பட்ட கட்சி அழிய வேண்டுமென்று இவர்கள் மனச்சாட்சியுடன்தான் சொல்கின்றார்களா என்று தெரியவில்லை.

தமிழரசுக் கட்சிக்குள் பிரச்சினைகள் உண்டு. ஆனால், அதனைத் தீர்க்க முடியும். முன்னைய காலங்களில் அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்திருக்கின்றோம். பதவிதான் முக்கியம் என்று இருந்தவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கின்றார்கள். இனத்துக்காக, மொழிக்காக, தேசியத்துக்காக இருந்தவர்கள் கட்சிக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் கட்சியோடே தொடர்ந்து பயணிக்கின்றார்கள்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இம்முறை புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், சமகாலத்துக்கு ஏற்றவாறு சில விடயங்கள் இதிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் எமது இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற தமிழ் மக்கள் ஆணை வழங்க வேண்டும்." - என்றார்.

---

## தேசிய மக்கள் சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படி இருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு 15 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனைப் பின்னடைவு எனக் கூற முடியாது. முதலாம் இடத்தைப் பிடித்த கட்சிக்கும், இரண்டாம் இடத்தைப் பிடித்த கட்சிக்கும் இடையில் நிறைய வித்தியாசம் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் என்பது தேசிய மட்டத் தேர்தல். மக்கள் வாக்களிப்பதில் ஆர்வமாக உள்ளனர். எனவே, இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சாதாரண பெரும்பான்மையை இலகுவில் பெறும். தேசிய மக்கள் சக்தியைவிட அக்கட்சியினருக்குப் பின்னால் உள்ள கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, அக்கட்சியினரால் நீண்ட பயணத்தைச் செல்ல முடியும் என நம்புகின்றேன்.

தேசிய மக்கள் சக்தியில் வாக்கு கேட்கும் எண்ணம் எனக்கு இல்லை. கிடைத்துள்ள மாற்றத்தை அவர்கள் சிறப்பாக முன்னெடுத்து செல்ல வேண்டும்" - என்றார்.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புவியியல்துறையின் தலைவரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் எதிர்வரும் 5ஆம் திகதி வரை இடையிடையே சிறிய மழை கிடைக்கும். எதிர்வரும் 6ஆம் திகதி முதல் மழை தீவிரமடையும். எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 23ஆம் திகதி அதிகாலை மற்றும் காலை வேளைகளில் குளிரான வானிலை நிலவும்." - என்றார்.



# 2024 பொதுத் தேர்தல் தொடர்பில் பொலிஸாருக்கு 168 முறைப்பாடுகள்

2024 பொதுத் தேர்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பொதுத் தேர்தல் தொடர்பில் பொலிஸாருக்கு 168 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்கு அமைய 191 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06 வேட்பாளர்களும் இவர்களில் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

இத்துடன் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் 45 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்றச்செயல்கள் தொடர்பில் 30 முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 138 முறைப்பாடுகளும் இவ்வாறு கிடைத்துள்ளன.

பொதுத் தேர்தல் தொடர்பில் 1259 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 13 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இன்ஸ்பெக்டர் துப்பாக்கியுடன் கைது

பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையின் இன்ஸ்பெக்டர் ஒருவர் ரீ-56 துப்பாக்கியுடன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தத் திணைக்களத்தின் கொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவின் அதிகாரிகளினால் அளுத்கம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்,தற்போதுபொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகரான கணேமுல்ல சஞ்சீவவுக்கு நெருக்கமானவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# விபத்துக்களில் 1,898 பேர் பலி

இந்த வருடத்தின் கடந்த ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதிவரை 1,818 வீதி விபத்துக்களில் 1,898 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோது, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, வீதிகள் அதிகளவில் வழுக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன.

குறிப்பாக மலைநாட்டின் பல பகுதிகளில் வளைவுகள் மற்றும் பள்ளமான வீதிகளில் அவதான பயணிக்க வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கோரியுள்ளார்.



# தொற்று நோயை தடுக்க துரித நடவடிக்கை; விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டது



தொற்று நோய் பரவல் நிலைமை தொடர்பில் துரித நடவடிக்கைகளை எடுப்பதற்காக விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இருந்து ஒழிக்கப்பட்ட அம்மை நோய் மீண்டும் பரவும் அபாயம் காணப்படுவதன் காரணமாக இந்த பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காலை 07 மணி முதல் மாலை 06 மணி வரை இந்த பிரிவு செயற்படவுள்ளது.

இந்த பிரிவின் ஊடாக அம்மை, ருபெல்லா உள்ளிட்ட தொற்றுநோய்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

011 - 744 65 13, 011-768 27 22, 011- 768 28 72 அல்லது 011- 768 26 62 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவும் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனிடையே, அம்மை நோய்த் தொற்றிய ஒருவரிடமிருந்து 18 பேருக்கு அம்மைத் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அம்மைத் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொள்ளாத நபர்கள் இருந்தால் உடனடியாக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கை 2019 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

எனினும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக சர்வதேச ரீதியில் பெரும்பாலான நாடுகளில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தடைப்பட்டன.

இதன் காரணமாக அம்மை நோய் பரவும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் விளைவாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இலங்கையில் மீண்டும் அம்மை நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

எதிர்வரும் 04 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை விசேட அம்மை, ருபெல்லா நோய் எதிர்ப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# ஆசிரியர்கள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என முறைப்பாடுகள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடும் பாடசாலை ஆசிரியர்கள் தங்களது பாடசாலையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் அவதானம் செலுத்த வேண்டும் என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

PAFFREL

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



“எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்.”

- தோமஸ் ஃபுல்லர்

(இங்கிலாந்து வராற்றாளர்)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊடக அடக்குமுறை

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய சர்வதேச தினம் நேற்று நவம்பர் 02ஆம் திகதி சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

1993 முதல் 2024 வரையான காலப்பகுதிகளில் உலகம் முழுவதும் 1700க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இத்தகைய சம்பவங்களில் பத்தில் ஒன்பது கொலை வழக்குகள் நீதித்துறையால் தீர்க்கப்படாமல் இருக்கின்றன எனக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய யுனெஸ்கோவின் கண்காணிப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் 2022 - 2023 காலப்பகுதியில் 153 ஊடகவியலாளர்களும், 2020 - 2021 காலப்பகுதியில் 117 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பொதுவாக உலகம் முழுவதிலும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களில் ஆக 14 வீதமான சம்பவங்கள் தொடர்பிலேயே நீதி முறைமை அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உலகில் யுத்தங்கள், மோதல்கள், பிணக்குகள் அதிகரித்து வரும் சூழலில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் சமீப காலத்தில் தீவிரமடைந்து, மோசமடைந்து வருகின்றன. மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக அவர்களின் பணி மாறி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை இன்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டெரஸ் விடுத்த செய்தியில் ஊடக சுதந்திரம் மற்றும் உலகெங்கும் உள்ள ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பிற்கான தனது உறுதிப்பாட்டை ஐ.நா. மீண்டும் வலியுறுத்துகின்றது என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

“மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு சுதந்திரமான பத்திரிகை அடிப்படையானது. ஆயினும் கூட உலகெங்கிலும் உள்ள பத்திரிகையாளர்கள் தங்கள் வேலையைச் செய்வதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். மேலும் உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கும் சக்திவாய்ந்தவர்களை அம்பலப்படுத்துவதற்கும் அவர்களின் பணியில் அச்சுறுத்தல்கள், வன்முறை மற்றும் மரணத்தை கூட சந்திக்க நேரிடுகிறது.

“சமீப ஆண்டுகளில், உலகம் மோதல் பகுதிகளில் உயிரிழப்புகளின் அபாயகரமான விகிதத்தைக் கண்டுள்ளது. குறிப்பாக காஸாவில், பல தசாப்தங்களில் எந்தப் போரிலும் அதிக எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதைக் கண்டுள்ளது.” - என்று அவர் கூறினார்.

“உலகளவில், 10 பத்திரிகையாளர் கொலைகளில் 9 தண்டிக்கப்படாமல் உள்ளன. தண்டனையின்மை மேலும் வன்முறையை வளர்க்கிறது. இது மாற வேண்டும்,” என்று அவர் கூறினார். ஆயுத மோதல் சூழ்நிலைகளில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள், ஊடக வல்லுநர்கள் மற்றும் தொடர்புடைய பணியாளர்களை மதிக்கவும் பாதுகாக்கவும் அவர் அழைப்பு விடுத்தார்.

“பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கும், எல்லா இடங்களிலும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கும் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த உறுதிமொழிகளை உயிர்ப்பிக்க அரசாங்கங்களை நான் அழைக்கிறேன். ஒன்றாக, வன்முறைச் சுழற்சியை முடிவுக்குக் கொண்டு வருவோம், கருத்துச் சுதந்திரத்தை நிலைநிறுத்துவோம், மேலும் பத்திரிகையாளர்கள் தங்கள் அத்தியாவசியப் பணிகளை பாதுகாப்பாகவும் அச்சமின்றியும் - எல்லா இடங்களிலும் செய்ய முடியும் என்பதை உறுதி செய்வோம்,” என்று அந்தோனியோ குட்டெரஸ் கூறினார்.

இலங்கையிலும் ஊடகவியலாளர்களின் - குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களின் - படுகொலைகள் தொடர்பில் தண்டனை வழங்காமை மோசமாக நீடிக்கின்றது. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அழைப்பு இலங்கையின் புதிய ஆட்சியாளர்களின் காதிலாவது வீழ்ந்திருந்தால் அவர்கள் திருந்துவார்கள். பார்ப்போம் நடப்பவற்றை.

# விஜய்யின் வருகை சீமானுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## கார்த்தி சிதம்பரம் தெரிவிப்பு

“நாம் தமிழர் கட்சிக்கு நிரந்தர வாக்குகள் இல்லாததால் விஜய் வருகை சீமானுக்கு யதார்த்தமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது”

– இவ்வாறு சிவகங்கை எம்.பி. கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

“விஜய் தனது கொள்ளையை தெளிவாக, வெளிப்படையாக சொல்ல வேண்டும்.

மேலும் அவரது மாநாட்டில் உத்வேகம் இருந்தது. அது அமைப்பாக மாறி, தேர்தலை சந்திக்கும் அளவுக்கு செல்லுமா? என்பதை காலம் தான் சொல்லும். சாதுரியமாக அல்லது பிம்பத்தின் அடிப்படையில் முடிவு எடுப்பார்களா என்பதை பார்க்க வேண்டும்.



அரசியல் கட்சியின் செயல்பாடு, நடத்தை, கொள்கை போக, போக தான் தெரியும். சீமான் கட்சிக்கு நிரந்தர வாக்குகள் கிடையாது. இதனால், அவருக்கு யதார்த்தமான அச்சம் வந்துள்ளது.” – என்றார்.

# ஆட்சியில் பங்கு கொடுப்போம் என்று விஜய் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது

## பொன். ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

“ஆட்சியில் பங்கு கொடுப்போம் என்று முதல் முறையாக விஜய் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், ஆட்சிக்கு வரவேண்டும் என்றால் களப்பணியாற்ற வேண்டும்.”

– இவ்வாறு பொன் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே சிதறாலில் முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் நேற்று செய்தியாளர்களின் கருத்து தெரிவிக்கையில்,

“புரிந்து கொள்ள முடியாத நிலையில் மாநாடு நடத்தி முடித்து உள்ளார் நடிகர் விஜய். அவர் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். குளத்தில் குளிக்க சென்ற பிறகு உடலில் தண்ணீர் பட கூடாது. ஆனால் குளிக்க வேண்டும் என்றால் கேலிக்குரிய ஒன்று. அது போல இருக்கும் அவரது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.இது அவருக்கும் நல்லதல்ல. தமிழகத்திற்கும் நல்லதல்ல. ஆட்சியில் பங்கு பெறுவோம் என சிலர் கூறி வருகின்றனர். அந்த நேரத்தில் ஆட்சியில் பங்கு கொடுப்போம் என்று முதல் முறையாக விஜய் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது. அதற்காக விஜய்க்கு பாராட்டுகள்.

அதே நேரத்தில் ஆட்சிக்கு வரவேண்டும் என்றால் களப்பணியாற்ற வேண்டும்.அதற்கு முன்பே இப்படி கூறுவது ஆணவத்தை காட்டுவதாகவும் உள்ளது. தி.மு.கவில் இருந்து



எம்.ஜி.ஆர் நீக்கப்பட்டபோது மக்கள் மத்தியில் எழுச்சி இருந்தது. என்.டி.ஆர். ஆந்திராவில் கட்சி தொடங்கிய போது அங்குள்ள மக்கள் அவரை வாழும் கண்ணனாக பார்த்தார்கள். கடவுளுக்கு நிகராக அழைக்கப்பட்டார்.

ஆகவே விஜய் அவராகவே இருந்து அரசியல் நடத்தட்டும். தமிழக அரசியல் உறுதி அற்ற நிலையில் உள்ளது. ஆளும் தி

மு.க. மீது ஏராளமான புகார் குற்றச்சாட்டுகள் உள்ளன. அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவதிலும் குழப்பம் உள்ளது. தற்போது விஜய் மாநாடு தான் தி.மு.க. கூட்டணியை பாதுகாத்து வருகிறது.” – என்றார்.

# ஒடிசா மாநிலத்தில் பஜனை குழு சென்ற வாகனம் விபத்து: அறுவர் உயிரிழப்பு



ஒடிசா மாநிலம் கந்த்ர்துடா மற்றும் சமர்பிண்டா கிராமத்தை சேர்ந்த பஜனை குழுவினர் சத்தீஸ்கர் மாநிலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு வானில் சொந்த ஊருக்கு திரும்பிக்கொண்டு இருந்த போது, நேற்று முன்தினம் இரவு ஒடிசா சுந்தர்கர் பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில வானில் பயணம் செய்த பஜனை குழுவை சேர்ந்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இது பற்றி அறிந்ததும் இறந்தவர்களின் உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பலியானவர்கள் குடும்பத்தினருக்கு இழப்பீடு கேட்டு அவர்கள் மறியல் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.







# போலியோ தடுப்பூசி வேலைத்திட்டத்தின் இறுதிக் கட்டம் வடக்கு காஸாவில் ஆரம்பம்

இரண்டாம் கட்ட போலியோ தடுப்பூசி வேலைத்திட்டத்தின் இறுதிக் கட்டம் வடக்கு காஸாவில் நேற்று தொடங்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தீவிர இஸ்ரேலிய குண்டுவீச்சுகள், பாரிய இடப்பெயர்வு மற்றும் பிராந்தியத்தில் அணுகல் இல்லாமை போன்ற காரணங்களால் இரண்டாவது கட்ட போலியோ தடுப்பூசி திட்டம் கடந்த மாதம் ஒத்திவைக்கப்பட்டது.

காசா 25 ஆண்டுகளுக்கு பின்னர் அதன் முதல் போலியோ நோயாளரை கடந்த ஓகஸ்ட் மாதம் பதிவு செய்தது.

இஸ்ரேலிய தரைவழித் தாக்குதல் தொடங்கி சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு வடக்கு காஸாவின் நிலைமைகள் தொடர்பில் பல ஐக்கிய நாடுகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் கருத்துக்களை முன்வைத்த நிலையில், போலியோ தடுப்பூசி வேலைத்திட்டம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.










# லெபனான் மீது இஸ்ரேல் மீண்டும் வான்வழித் தாக்குதல்: 52 பேர் பலி

வடக்கு லெபனானின் விவசாய கிராமங்களில் இஸ்ரேல் வெள்ளிக்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் 52 பேர் உயிரிழந்தனர் என்று லெபனான் சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

லெபனானில் உள்ள தீவிரவாதக் குழுவான ஹிஸ்புல்லாக்களுக்கு எதிரான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலின் தொடர்ச்சியாக இந்த கிராமங்கள் குண்டுவீச்சுக்கு உள்ளாகின.

இதனிடையே, மத்திய காசாவில் வியாழக்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்த 25 பேரின் உடல்களை பாலஸ்தீனியர்கள் மீட்டெடுத்ததாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். தெற்கு பெய்ரூட்டில் புறநகர் பகுதியான தஹியேக்கில் பல்வேறு கட்டடங்களின் மீதும் இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. என்றாலும் பெரும்பாலான மக்கள் அங்கிருந்து வெளியேறி விட்டதால் அங்கு உயிரிழப்புகள் குறித்து தகவல் இல்லை.

காசா மற்றும் லெபனானில் போர் நிறுத்தத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் ஹிஸ்புல்லா தீவிரவாத குழுவுக்கு எதிரான தனது தாக்குதலை இஸ்ரேல் லெபனான் எல்லைப்புறத்தையும் தாண்டி விரிவாக்கம் செய்து வருகிறது. அதேநேரத்தில் வடக்கு காசாவில் ஹமாஸ்களுக்கு எதிராகவும் ஒரு நீண்ட போரினை இஸ்ரேல் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு ஹில்புல்லாக்கள் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே மோதல் தொடங்கியதில் இருந்து லெபனானில் 2,900 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 13,150 பேர் காயமடைந்துள்ளனர் என்று லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்த 52 பேர் சேர்க்கப்படவில்லை. கொல்லப்பட்டவர்களில் கால் பகுதியினர் குழந்தைகள் மற்றும் பெண்கள் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டுக்கும் மேலாக ஹமாஸ்களுக்கு எதிரான இஸ்ரேல் காசா போரில் இதுவரை சுமார் 42 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என பாலாஸ்தீன சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலின் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி பொதுமக்கள் உட்பட 1,200 பேரைக் கொன்று, 250 பேரை கடத்திச் சென்றதைத் தொடர்ந்து இந்தப் போர் தொடங்கியது என்பது நினைவுகூரத்தக்கது.








# உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் விசேட தினம் இன்று

பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினமாக ஞாயிற்றுக்கிழமையான இன்றைய நாள் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க 2,090 தபால் அலுவலகங்கள் இன்று திறக்கப்பட்டிருக்குமென சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித கே ரணசிங்க தெரிவித்துள்ளார்.

விநியோகப் பணிகளில் 8,000 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரை வீடுகளுக்கே வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.



# 14 வீதத்திற்கும் அதிகமானோர் நீரிழிவு நோயினால் பாதிப்பு

நாட்டின் நகர்ப்புற மக்களில் 23 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 வீதமான மக்கள் ஆரம்பகட்ட நீரிழிவு நோய் அறிகுறிகளைக் கொண்டுள்ளனர் என சமூக வைத்திய நிபுணர் ஷாந்தி குணவர்தன கூறியுள்ளார்.

நாட்டு மக்களில் 14 வீதத்திற்கும் அதிகமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மாசக்தி கந்தனே !

( கந்தசஷ்டி 2 ஆம் நாள் )

சூரரை வதைக்க வந்தவன் கந்தன்
சூரரை வதைக்கா துடைத்தனன் அகந்தையை
அகந்தையை அழித்து அன்பைக் காட்டியே
அடைக்கலமாக அவன் கழல் அமர்த்தினான்

மாறுபடா சூரர்தமை மனந்திருந்தச் செய்தான்
வரமிழந்து சூரர்க்கு வரமாக அமைந்தான்
கூறுடைய குணமதனை குமரவேள் களைந்தான்
குன்றிருக்கும் இடமெல்லாம் சென்றுமே அமர்ந்தான்

ஏறுமயிலேறி விளை யாடியே நின்றான்
ஈசனுக்கே ஆசானாய் உபதேசம் செய்தான்
மாறுடைய மனத்தாரை மனமாற வைத்தான்
மாசக்தி மிக்க கந்தனே ஆவான்!!

*மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,*
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,*
*மெல்பேர்ன்,*
*அவுஸ்திரேலியா.*




# கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் அடையாள பணிப் புறக்கணிப்பு

கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அவசர சிகிச்சை சேவைகள் வழமைபோன்று இடம் பெறுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## செட்டிக்குளத்திலிருந்து மாத்தறைக்கு

# லொறியில் 12 எருமைகளை கடத்தும் முயற்சி முறியடிப்பு



(கி.வசந்தன்)

செட்டிகுளம் பகுதியில் இருந்து மாத்தறைக்கு லொறி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 12 எருமை மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே லொறி ஒன்றில் 12 மாடுகள் வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இருந்து மாத்தறைக்கு கொண்டு செல்லப்படுகின்றமை கண்டு பிடிக்கப்படது.

முறையான அனுமதிப் பத்திரமின்றி மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை விசாரணையின் போது தெரிய வந்ததையடுத்து, சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான 12 எருமை மாடுகளும் மீட்கப்பட்டன. அதனைக் கொண்டு சென்ற லொறி சாரதியான மொனராகலை பகுதியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் அனுமதியின்றி மாடுகளை கொண்டு சென்றமை மற்றும் மிருக வதைச் சட்டம் என்பவற்றின் அடிப்படையில் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீட்டு வளாகத்திற்குள் முதலை!

(கி.வசந்தன்)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வளாகத்திற்குள் முதலை ஒன்று நேற்று வந்தமையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியாவில் பருவமழை ஆரம்பித்துள்ளதுடன், கடந்தசில நாள்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.



இந்நிலையில் பூந்தோட்டம் பகுதியில் உள்ள காணி ஒன்றிற்குள் சுமார் நான்கு அடி நீளம் கொண்ட முதலை ஒன்று மாலை நேரம் உள்நுழைந்துள்ளது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் முதலையை அங்கிருந்து அகற்றியிருந்தனர்.

# கனகராசா காலமானார்



அரச கரும மொழிகள் திணைக்களத்தின் முன்னாள் அத்தியட்சகரும் மூத்த மொழிபெயர்ப்பாளருமான ஆர். ஏ.கனகராசா தமது தொண்ணூறு வயதில், கொழும்பில் காலமானார்.

நான்கு தசாப்தங்களாக அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளர், அத்தியட்சகர் பதவிகளை வகித்த இவர் ஓய்வு பெற்ற பின்னரும் போக்குவரத்து அமைச்சு, புத்த சாசன அமைச்சு ஆகியவற்றில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் அமரர் இராயப்பு தம்பதியின் புதல்வரான இவர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆர். ஈ. ஆனந்த ராஜா, ஓய்வு நிலை அதிபர் அருட் சகோதரி புஷ்பராணி, ஆனந்தராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இந்தியாவில் தமது பட்டப்படிப்பை முடித்த பின்னர் மூத்த தமிழ்த் தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் பிரத்தியேகச் செயலாளராகவும் அவர் பணியாற்றினார் .

அவரது இறுதிச் சடங்கு நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு, கொழும்பு கனத்தையில் இடம்பெறும்.



# பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டின் பல பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, வட மத்திய மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என்பதுடன் மின்னல் தாக்கங்கள் குறித்து அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை, கண்டி, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் கேகாலை, தெஹியோவிட்ட, மாவனெல்லை பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, குருவிட்ட, கஹவத்த பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், பதுளை மாவட்டத்தின் வெலிமடை, ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் உடபலாத்த, யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


# சட்டவிரோதமாக ஏலக்காயை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த சந்தேகநபர் கைது

சட்டவிரோதமாக ஏலக்காய் தொகையை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 08 கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் டுபாயில் இருந்து மேற்படி பொருள்களை நாட்டுக்குக் கொண்டுவர முயற்சித்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 12ஐ சேர்ந்த 48 வயதான என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.







# இந்த வருடத்தில் 266,000 இலங்கையர்கள் தொழிலுக்காக வெளிநாடுகள் சென்றுளனர்

இந்த வருடத்தில் மாத்திரம் 266,000 இலங்கையர்கள் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் தொழில் புரிவோர் மூலம் இவ்வருடம் மாத்திரம் 4,843 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி நாட்டுக்கு கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் குறித்த தொகை 6 பில்லியன் ரூபாவினை எட்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எதிர்பார்ப்பு வெளியிட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2024




இன்று உங்களுக்கு ஆக்க பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்க ளிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று உங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து சிலநல்லதிட்டங்களை உருவாக்குவீர்கள். உங்கள் தொழில் வட்டாரத்தில் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

பணியில் வெற்றி பெறுவதற்கு சிறப்பாக திட்டமிடும் திறமை உங்களிடம் காணப்படும். அதனால் பணிகளை குறித்த நேரத்தில் தரமாக முடித்து தர முடியும்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்ளவும். சரியான புரிந்துணர்வு இருந்தால் உறவு நல்லுறவாக இருக்கும்.

உங்கள் வருமானம் அதிகரிப்பதற்கான வழி காண வேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்காக பணத்தை அதிகமாக செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.




உங்கள் செயல்களை ஊக்கத்துடன் குறித்த நேரத்தில் செய்வதன் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கும். சின்னச் சின்ன விஷயங்களுக்காக மன அமைதியை கெடுத்துக் கொள்ளாமல் விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடமும் கீழ் பணிபுரிபவர்களிடமும் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். இலக்கில் கவனம் செலுத்தினால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியும்.

உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.




உங்கள் அனைத்து செயல்களையும் கவனமுடன் செய்வதற்கு உரிய நேரத்தையும் ஆர்வத்தையும் மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றி கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் ஆற்றல் அங்கீகாரம் பெறும். நீங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலுங்கள். உங்கள் துணையை வெளியிடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

உங்கள் செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். உங்கள் பணத்திற்கு பாதுகாப்பு இல்லாத திட்டங்களில் பணத்தை சேமிக்காதீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை கொண்டிருப்பீர்கள்.




இன்றைய நாள் சிறப்பான நாளாக இருக்கும். உங்களுக்கு சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று சரியாக முடிவெடுப்பீர்கள்.

நீங்கள் விவேகத்துடன் யோசித்து செயலாற்ற வேண்டும். பொருத்தமான வேலை முறையை கையாளுங்கள். நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பண வரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். இன்று மகிழ்ச்சி காரணமாக சிறந்த நிலையில் காணப்படுவீர்கள்.

எந்தவிதமான கவனச்சிதறலுக்கும் இடம் அளிக்க வேண்டாம். பொறுமையுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வங்கியிருப்பு திருப்தியான முறையில் நன்கு பராமரிக்கப்படும்.

இன்று கால் வலி சிறிது தொல்லையைக் கொடுக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும்.




முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. உங்களுக்கு பயனுள்ள வகையில் இன்றைய நாளை திட்டமிடுங்கள்.

என்ன வேலை செய்ய வேண்டும் என்பத முன்கூட்டியே திட்டமிட்டு பணியாற்றுங்கள். முக்கியமான வேலைகளில் கவனம் செலுத்தி அதனை விரைவாகசெய்து முடியுங்கள்.

பக்குவமான முறையில் பிரச்சினைகளைக் கையாண்டு தேர்க வேண்டும். அமைதியான மனதுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க கடன் வாங்குவீர்கள்.

குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணியும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.11.2024




இன்று உங்களுக்கு சிறந்த நாள், முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இன்று மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள்.

உங்கள் முயற்சியின் மூலம் பணியில் நல்ல விளைவுகளைக் காணலாம். உங்கள் கடின உழைப்பு அனைவராலும் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறையால் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்படும்.

பூர்வீகச் சொத்துக்கள் மூலம் பணம் கிடைக்கும். அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலன் தரும்.




இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். பதட்டப்பட வேண்டாம். முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

உங்கள் பணிகளை திட்டமிடவேண்டியது அவசியம். கவனச் சிதறல்களைத் தவிர்த்தால் பணிகள் விரைவாக முடியும்.

உங்கள் துணையிடம் நேரம் ஒதுக்கி அவர் / அவள் விரும்பும்படி இருங்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி ஆறுதலைத் தரும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புதிய தொடர்புகள் மற்றும் புதிய நண்பர்கள் அமைத்துக் கொள்ள இன்று உகந்த நாள்.

இன்றைய நாளை பலனுள்ளதாக ஆக்க சிறப்பாக திட்டமிட வேண்டும். உங்களை நீங்கள் வருத்திக் கொள்ளாதீர்கள் அல்லது பணிகளை இழுத்துப் போட்டு செய்யாதீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணம் சம்பாதிக்க விரும்புவீர்கள், உங்களிடம் அந்த ஆற்றல் காணப்படும். நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இருமல் அல்லது சளி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியம் சுமாராக காணப்படும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல் ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.








# தமிழ்த் தேசிய அரங்கில் சுயேச்சைக் குழுக்களும் சாராய முகவர்களும்!



புருஜோத்தமன் தங்கமயில்

வடக்குக் கிழக்கில் சுயேச்சைக் குழுக்களாக போட்டியிடும் தரப்பினரால், தங்களின் வெற்றிக்கான வாய்ப்புகள் பறிக்கப்பட்டுவிடுமோ என்கிற அச்சம் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வந்திருக்கின்றது. வழக்கத்துக்கு மாறாக இம்முறை தேர்தலில் அதிகளவான சுயேச்சைக் குழுக்களும், தனி ஆளுமைகளை நம்பிய சிறிய கட்சிகளும் போட்டியிடுக்கின்றன. அவை, வெற்றிகளைக் குறித்து பெரும் எதிர்பார்ப்போடும் இருக்கின்றன. அதனால், பிரச்சார நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. வாக்குப் பிரிப்பு, பிரதேசவாத – மதவாத சிந்தனை மற்றும் தனித்த ஆளுமைகளின் வெற்றியைத் தடுத்தல் என்ற நோக்கங்களுக்காக சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறக்கிவிடப்படுவது வழக்கம். அல்லது, தங்களின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால், அதற்குப் பதிலாக சுயேச்சைக் குழுக்களை பிரதியிட்டுக் கொள்ளலாம் என்ற நோக்கத்திலும் பிரதான கட்சிகள், சுயேச்சைக் குழுக்களை தேர்தல் களத்தில் புகுத்திவிடுவதுண்டு. ஆனால், அவற்றின் இலக்கு வெற்றி குறித்ததாக இருந்ததில்லை. மாறாக, வெற்றியைத் தட்டிப்பறிக்கும் எண்ணமே அதிகமாக தொக்கி நின்றிருக்கிறது. அந்த எண்ணத்தின் பின்னால், பெரும் பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடங்கி பல சலுகை விடயங்களும் முக்கிய காரணிகளாக இருப்பதுண்டு. இந்தத் தேர்தலிலும் அவ்வாறான விடயங்களுக்காக பல குழுக்கள் களத்தில் இறக்கி விடப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் பொதுத் தேர்தல் வரலாற்றில் சுயேச்சைக் குழுக்கள் பெரிய வெற்றிகளைப் பெற்றதில்லை. 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஈரோஸ் இயக்கம், சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டு 13 ஆசனங்களை வடக்குக் கிழக்கில் வென்றது. ஆனால், அந்த வெற்றிக்குப் பின்னாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருங்கிணைந்த வாக்களிப்புக்கான அழைப்பு இருந்தது. அந்த வெற்றியை சுயேச்சைக் குழுவொன்றின் வெற்றியாக கொள்ள முடியாது. தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் பின்னால், பெருமெடுப்பில் திரளத் தொடங்கிய தருணம் அது. அந்தத் திரட்சியின் அளவினை பரிசோதித்துப் பார்க்கும் முகமாக, ஈரோஸ் ஊடாக புலிகள் விடயத்தை அணுகினார்கள். அதில், அவர்கள் எதிர்பார்த்த அளவினைத் தாண்டிய வெற்றியையும் பெற்றார்கள். ஏனெனில், இந்திய – இலங்கை இராணுவங்களின் கெடுபிடிகள், ஒட்டுக் குழுக்களின் கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், அவற்றைப் புறந்தள்ளி தமிழ் மக்கள், புலிகளின் அழைப்புக்கான திரட்சியைக் காட்டினார்கள். அதுதான், பின்னரான காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றத்திற்கு வித்திட்டது. ஆயுதப் போராட்டக்களத்தில் வெற்றிகளைப் பெற்றாலும், அதனை சர்வதேச ரீதியில் வலுப்படுத்த வேண்டுமென்றால், ஜனநாயக ரீதியான அரசியலில் மக்களின் அங்கீகாரம் வேண்டும் என்பதை புலிகள் உணர்ந்திருந்தார்கள். அதனால்தான், கூட்டமைப்பைக் கூட்டிக் கட்டினார்கள்.

இப்போது, தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து இறங்கியிருக்கின்ற சுயேச்சைக் குழுக்களில் ஒரு சில, தமிழ்க் கட்சிகளினால் வேட்பாளர் நியமனக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் தொடங்கி, கட்சிகளில் இருந்து துரத்தப்பட்டவர்கள் வரையில் குழம்பிப் போயிருக்கின்ற களத்தினை கையாண்டுவிட வேண்டும் என்பதற்காக போட்டியிடுகின்றனர். அதிகளவான

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசிய அரங்கில் சுயேச்சைக் குழுக்களும் சாராய முகவர்களும்!

தொடர்ச்சி▲

சுயேச்சைக் குழுக்களும், தனி நபர் கட்சிகளும் போட்டியிடும் போது, அவற்றை நோக்கி வாக்குகள் பிரிந்து போனால், பிரதான கட்சிகளை நோக்கிய வாக்குத் திரட்சியில் கனதியான அடி விழும். அது, வெற்றிக்கான அளவில் பலத்த சேதாரத்தை ஏற்படுத்தும். சிலவேளை, சில கட்சிகளின் ஒற்றை ஆசனக் கனவிலேயே கல்லெறிந்துவிடும். தேர்தல் மாவட்டமொன்றில் மொத்தமாக அளிக்கப்படும் வாக்குகளில் ஐந்து வீதத்துக்கு குறைவான வாக்குகளைப் பெறும் தரப்பினர், ஆசன பங்கீட்டின் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் பத்தாயிரத்து சில்லறை வாக்குகளைப் பெற்ற ஈபிடிபி ஓர் ஆசனத்தை எடுத்துக் கொண்டு போனது. அதுபோல, 2015 பொதுத் தேர்தலில் விஜயகலா மகேஸ்வரனின் வெற்றி, ஐ.தே.க. கட்சியின் ஊடாக நிகழ்ந்தாலும், அதுவும் உதிரி வாக்குகளினால் நிகழ்ந்தப்பட்டது.

சுயேச்சைக் குழுக்கள் மற்றும் தனி நபர்களை நம்பிய கட்சிகள் தங்களின் வாக்குகளை பிரதான கட்சிகளின் வாக்கு வங்கியில் இருந்துதான் பிரித்து எடுத்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டு. திடீரென்று அவற்றினால், தங்களுக்கான வாக்கு வங்கியை புதிதாக கிராம மட்டங்களில் இருந்து பெரியளவில் கட்டமைத்து திரட்ட முடியாது. பிரதான கட்சிகள், தலைவர்கள் மீதான அதிருப்தி வாக்குகளைக் குறிவைத்து, இந்தக் குழுக்கள் தங்களின் பிரச்சார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் போது, பிரதான கட்சிகளில் வாங்கு வங்கியில் சிதைப்பினைச் செய்ய முடியும். கடந்த பொதுத் தேர்தலில், கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் ஏற்பட்ட சிதைவினை, யாழ்ப்பாணத்தில் அங்கஜனும், மட்டக்களப்பில் பிள்ளையானும் வியாழேந்திரனும் அறுவடை செய்து கொண்டார்கள். அம்பாறையில், கருணா அம்மானால், கூட்டமைப்பிற்கான ஆசன இழப்பையே செய்ய முடிந்தது. இம்முறையும் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசிய வாக்குகளைக் குறிவைத்து சுயேச்சைக் குழுக்களும், தனி நபர்களின் கட்சிகளும் வாக்குச் சேகரிப்பில் குறியாக இருக்கின்றன. குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் மருத்துவர் அர்ச்சுனா தலைமையிலான சுயேச்சைக் குழுவொன்று வெற்றி குறித்த பெரிய நம்பிக்கையோடு களத்தில் இறங்கியிருக்கின்றது.

மருத்துவத்துறைக்குள் காணப்படும் ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்துகிறேன் என்று அறிவித்ததன் மூலம், ஒருசில நாள்களில் ஊதிப் பெருப்பிக்கப்பட்டு நாயகன் ஆனவர் மருத்தவர் அர்ச்சுனா. அவருக்குப் பின்னால், தென்மராட்சி மக்கள் திரண்டு நின்றார்கள். அவரை, புதிய நம்பிக்கையாக சமூக ஊடகங்களும், புலம்பெயர் தேசத்திலுள்ள (அடிப்படைகளை நோக்காது) அறச்சீற்றம் கொள்ளும் தரப்பினரும் கொண்டாடித் தீர்த்தனர். அதன் விளைவுகளில் ஒன்றாக இப்போது, அர்ச்சுனா தலைமையிலான சுயேச்சைக் குழுவையும் யாழ்ப்பாண மக்கள் தேர்தலில் எதிர்கொள்ள வேண்டி வந்திருக்கின்றது. ஒரு கலகக்காரன் போல, மேலெழுந்த அர்ச்சுனா, ஒருசில நாட்களிலேயே தன்னுடைய முன்னுக்குப்பின்னான முரண்பட்ட நடவடிக்கைகளினால், தான் யார் என்பதை வெளிப்படுத்திவிட்டார். தமிழ்ச் சமூகம் தொடர்பிலான எந்தவித அடிப்படைப் புரிதலும் அற்ற அவரை, அரசியல் விடுதலைக்கான முகமாக நிறுத்துவதெல்லாம் அபத்தங்களில் உச்சம். அவர் நாளும் பொழுதும் சமூக ஊடக நேரடி பகிர்வுகளின் ஊடாக, பொதுச் சமூகத்தின் ஒழுங்கினைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார். தான் என்ன செய்தாலும் அதனை கண்ணை மூடி ஆதரிப்பதற்கென்று ஆள்கள் இருக்கிறார்கள், ஆகவே, எதையும் எப்படியும் செய்துவிடலாம் என்று நினைக்கிறார். அதுதான், அவரையும் தேர்தல் களத்தில் இறக்கிவிட்டிருக்கின்றது. இந்த நிலையை ஏற்படுத்திவிட்டதில், யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்துள்ள கல்வியாளர்கள், ஆளுமைகள் தொடங்கி பல தரப்பினரும் இருக்கிறார்கள் என்பதுதான் வருத்தமளிக்கும் செய்தி. நீர்க்குமிழி உடையாது என்று பந்தயம் கட்டுவது எவ்வளவு அறிவிலித்தனமோ, அவ்வாறான நிலைதான் அர்ச்சுனாவை முன்னிறுத்தி அரசியல் அதிகாரக் கனவினை அடைய முயற்சிப்பதுமாகும். இன்றைக்கு அந்தக் குழுவினர், தங்களின் வாக்குகளில் சேதாரத்தை ஏற்படுத்திவிடுவார்களோ என்று தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ/ம் அச்சம் கொண்டிருக்கின்றன. ஏனெனில், யாழ்ப்பாணத்தில் முதலிடத்தை குறிப்பாக யாழ்ப்பாணத்துக்குள் மூன்று ஆசனக் கனவோடு இருக்கும் தமிழரசுக் கட்சிக்கு, மருத்துவர் அர்ச்சுனா குழுவினர் தென்மராட்சிக்குள் வாக்குகளைப் பிரித்துவிட்டால், அது பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கவே, சசிகலா ரவிராஜ், சங்குச் சின்னத்தில் வருகிறார். அங்கஜனுக்கும் ஓரளவு செல்வாக்கு அங்கு உண்டு. அவ்வாறான சூழலில், மருத்துவர் அர்ச்சுனா அணியும் வாக்குப் பிரிப்பைச் செய்துவிட்டால், தமிழரசுக் கட்சியினால் அதுவும் கேசவன் சயந்தனால், தன்னுடைய நிலையை பலப்படுத்துவது என்பது பெரும் சிக்கலாகிவிடும். சயந்தனால், தென்மராட்சியைத் தாண்டி வாக்குகளைப் பெறுவதும் அவ்வளவு சாத்தியமில்லாத நிலையில், கட்சிக்கான வாக்கிழப்பு என்பது, அவரின் அரசியல் எதிர்காலத்தின் மீதான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும். கடந்த சில தேர்தல்களாக தென்மராட்சிக்குள் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேர்வாகவில்லை என்ற பெரும் கோபம் அந்தப் பகுதி மக்களிடம் உண்டு. அந்தக் கோபம் தொடர் சோகமாக மாறும் காட்சிகளையே, தென்மராட்சிக்கான தேர்தல் களம் பதிவு செய்கின்றது.

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசிய அரங்கில் சுயேச்சைக் குழுக்களும் சாராய முகவர்களும்!

தொடர்ச்சி▲

மட்டக்களப்பில் இம்முறை கடந்த தேர்தலில் இழந்துவிட்ட ஆசனங்களை இழுத்துப் பிடித்துவிட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு தமிழரசுக் கட்சிக்கு இருக்கின்றது. அதற்காக வழக்கத்தை தவிட பிரச்சாரப் பணிகளிலும் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். அப்படியான கட்டத்தில், புதிய சில குழுக்கள் தமிழ்த் தேசியம் மற்றும் பிரதேச வாதத்தை முன்னிறுத்தி மட்டக்களப்பு மக்களை குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவை இடைவிடாது, பிரதான கட்சிகளுக்கு நிகராக பிரச்சாரப் பணிகளிலும் ஈடுபடுகின்றன. இதனால், அந்தக் குழுக்கள், தமிழரசுக் கட்சிக்கான வாக்குகளை சிதறடித்துவிடுமோ என்கிற அச்சம் அந்தக் கட்சியினரிடம் உண்டு. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியும், சங்குக் கூட்டணியும் தமிழ்த் தேசியம் பேசி வாக்கினைக் கோருகின்றன. பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, வழக்கமாக தங்களின் பிரதேச அடிப்படைகளை முன்வைத்து தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றது. கடந்த காலங்களில் ‘கிழக்கு மீட்பு’ என்று அவர்கள் முன்னெடுத்த கோசம் வலுவிழந்திருக்கின்றது. அதற்கு, அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக கோட்டா – ரணில் – ராஜபக்ஷ ஆட்சியின் பங்குதாரர்களாக இருந்ததும் காரணமாகும். ஆட்சியில் பங்கெடுத்தும், கிழக்கில் தமிழர் நில ஆக்கிரமிப்பினை பிள்ளையானால் தடுக்க முடியவில்லை என்பது பிரதான குற்றச்சாட்டு. அத்தோடு, பல நேரங்களில் அரசியல் ஏவல் தரப்புப் போன்று செயற்பட்டுவிட்டதாக அதிருப்தி மக்களிடம் கனதியாக உண்டு. இன்னொரு பக்கம், பிள்ளையான் மீது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது. அப்படியான சூழலில், அவரை நோக்கிய வாக்குத் திரட்சி, எதிர்காலத்தில் தேவையற்ற அடையாளத்தினைத் தங்களின் மீது சுமத்திவிடும் என்று சிந்தனை மட்டக்களப்பு மக்களிடம் உண்டு. அதன் விளைவாக, கடந்த காலங்களில் அவரின் பின்னால், இயங்கிய மட்டக்களப்பின் படித்த – ஆளுமையான சமூகமொன்று இம்முறை விலகிக் கொண்டு, களத்தில் அமைதியாகிவிட்டது. இவ்வாறான சூழலில், வாக்கு அறுவடைக்காக தமிழரசு காத்திருக்கின்றது. அதில், கல்லெறியும் வேலைகளை சுயேச்சைக் குழுக்கள் செய்கின்றன என்பது அந்தக் கட்சியினரின் பெரும் எரிச்சலாகும்.

ஜனநாயகம் என்பது, அனைவருக்கும் உரித்துடையது. அதில் இன்னார்தான் பங்கெடுக்க வேண்டும். மற்றவர்கள் ஒதுங்கி நிற்க வேண்டும் என்பதெல்லாம் அடிப்படை முரணானது. தங்களின் நிலைப்பாடுகளை முன்வைத்து, யாரும் மக்களிடம் ஆதரவினைக் கோரலாம். அது என்றைக்கும் தொடரவும் வேண்டும். ஆனால், அந்த வசதி வாய்ப்புக்களையும் ஜனநாயக இடைவெளியையும் தங்களின் தனிப்பட்ட சுயலாப, பணமீட்டும், ஊழல் மோசடிகளுக்கான விடயமாக யார் கையாண்டாலும், அதனை அம்பலப்படுத்த வேண்டும். ஏனெனில், இவ்வாறான தரப்புக்களின் பங்கெடுப்பு என்பது, தொடர் ஓட்டத்தில் தேர்தல் களத்தினை ஒட்டுமொத்தமாக பணமும் சலுகை அரசியலும் ஆட்கொள்வதற்கு வித்திட்டுவிடும். இன்றைக்கு, தேர்தல் என்றாலே வாக்குறுதிகளைத் தாண்டி பணமும் சலுகைகளும் கோலோச்சத் தொடங்கிவிட்டன. உரிமை அரசியல், அதற்கான செல்நெறியோடு வருவோரை புறந்தள்ளிக் கொண்டு, சலுகை சார் முன்வைப்பாளர்கள் முன்னுக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். அவ்வாறான கட்டம் மிகப் பெரிய ஆபத்தானது. அது, ஒரு கட்டத்தில் இந்தியத் தேர்தல்களை ஒத்த பணமும், பானமும் வாக்களிப்பை தீர்மானிக்கும் சக்திகளாக உருவெடுத்துவிட்ட சூழலை இங்கும் விதைத்துவிடும். அப்படியான நிலை உருவாகிவிட்டால், அது தேச விடுதலை சார்ந்து இயங்கும் தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைத்துவிடும்.

தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருந்து கொண்டு, மாவீரர்களின் பெயர்களினால் வாக்குகளைப் பெற்று பதவிகளை அடைந்துவிட்டவர்களே, கடந்த ரணில் – ராஜபக்ஷ அரசாங்கத்திடம் சாராயக்கடை முகவர்களாக செயற்பட்டிருக்கிறார்கள். சி.வி.விக்னேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், அதில் வெளிப்படையாக மாட்டிக் கொண்டு ஊடகங்களில் முன்னால் ஒப்புக் கொண்டு தேர்தலிலில் இருந்து ஒதுங்கியும் விட்டனர். ஆனால், இன்னும் சில ஊழல் பெருச்சாளிகள், தமிழ்த் தேசிய வேடத்தோடு தேர்தல் களத்தில் நிற்கின்றன. அந்தப் பெருச்சாளிகள், தமிழ்த் தேசியத்தின் பெயரினால் மாத்திரமல்ல, பணம் சலுகைகளின் வழியாக வாக்குகளைச் சேர்க்கும் அடிமட்ட வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் அறமென்ற ஒன்று ஒருபோதும் இருந்ததில்லை. தேர்தல் வெற்றிக்காக எந்த நிலைக்கும் கீழிறங்கி வேலை செய்வார்கள். அவ்வாறானவர்கள் எல்லாம் தேர்தல் களத்தில் வீறாப்போடு நிற்கும் போது, நாங்கள் களம் காணுவதில் என்ன தப்பு என்று சுயேச்சைக் குழுக்களோ, தனி நபர்களின் கட்சிகளோ கேள்வி எழுப்பினால், பதில் சொல்வது கடினமானது. அவ்வாறான சூழலில், தமிழ்த் தேசிய அரசியலுக்கு அச்சுறுத்தலான அனைத்துத் தரப்பினரையும் இனங்கண்டு தோற்கடித்து, வெளித்தள்ள வேண்டிய பொறுப்பு மீண்டும் மீண்டும் மக்களின் கைகளிலேயே இருக்கின்றது. தமிழரசுக் கட்சியோ, சங்குக் கூட்டணியோ, விக்னேஸ்வரனின் கட்சியோ அல்லது காங்கிரஸோ எந்தக் கட்சியாக இருந்தாலும், அதற்குள் தகுதியான ஊழல் படியாத கரங்களைப் பலப்படுத்த வேண்டும். குறிப்பாக, சாராயக்கடை முகவர்களாக இயங்காதவர்களை தெரிவு செய்து, தமிழ்த் தேசிய அரசியல் களத்தினை பலப்படுத்த வேண்டும். அதுதான், எதிர்கால நம்பிக்கைகளை பலப்படுத்துவதற்கு உதவும்.




கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

# "கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைச்சாண்டி"

**டாக்டர் அர்ச்சுனா இராமநாதன் அவர்கட்கு,**

வணக்கம்!

இது உங்களுக்கு நான் எழுதும் இரண்டாவது கடிதம்.

உங்களது நலம் நோக்கித் தமிழ் மக்கள் அனைவரும் பிரார்த்தித்து நிற்கிறார்கள். அது உங்கள் மேல் வைத்த அபிமானத்தாலன்று. உங்களின் மனக்குழப்பத்தால் நம் இனம் அவமரியாதைக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதாலேயாம்.

தமிழ் மக்கள், கடந்தகாலப் போரில் எத்தனையோ வகையான குண்டு வெடிப்புக்களைக் கண்டிருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் பயப்படாத அவர்கள், அண்மைக்காலமாக உங்களின் வாயிலிருந்து பிறக்கும் வார்த்தைகளுக்கு, அவற்றைவிட அதிகமாகப் பயப்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

நீங்கள் தெரிந்துதான் இந்த வார்த்தைகளைப் பேசுகிறீர்களா? அல்லது உங்களை அறியாமல் இந்த வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து வருகின்றனவா? பின்னது தான் உண்மை என்றால் நிச்சயம் நீங்கள் 'ட்றீற்மென்ற்' றுக்குச் செல்லவேண்டித்தான் இருக்கப் போகின்றது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடந்ததாகச் சொல்லப்பட்ட தவறுகளை எவருக்கும் பயப்படாமல் நீங்கள் வெளிக்கொணர்ந்த போது, ஆரம்பத்தில் ஓர் புரட்சிப் போராளியாகத்தான் சமூகம் உங்களை இனங்கண்டது. உண்மையில் நான்கூட உங்களின் துணிவு கண்டு அப்போது வியந்திருக்கிறேன். அப்படி உங்கள் மேல் ஏற்பட்ட மதிப்புத்தான், மக்களை உங்கள் பின்னால் அணிதிரளச் செய்தது.

பொங்குகிற பாலில் தண்ணீர் தெளித்ததும் அது அடங்கிப் போய் விடுவது போல, உங்கள் செயல் கண்டு மதிப்புற்று பொங்கி எழுந்த மக்களை, உங்களது வார்த்தைகள் தண்ணீர் தெளித்த பாலாய் அடங்கச் செய்து விட்டன.

ஆரம்பத்தில் உங்களுக்குக் கிடைத்த மக்கள் ஆதரவு, ஓர் தர்மப் போரட்டத்திற்கானது என்பதை அறியாமல், அது உங்களுக்குக் கிடைத்த தனி ஆதரவென்று கருதி, நீங்கள் நிலை தடுமாறிப் போனீர்கள். உங்களின் 'துடுக்குத்தனம்' கொஞ்சம் கொஞ்சமாய் வெளிவந்து விரியத் தொடங்கியது.

உங்களின் துறைசார்ந்த வைத்தியர்களோடு நீங்கள் தொடுத்த போரை, முதலில் மக்கள் தமக்கான போரென்றுதான் நினைத்தார்கள். போகப் போகத்தான், அது தற்புகழுக்கான போரென்பது தெரியவந்தது. மற்றவர்களை அலட்சியம் செய்வதும், தூற்றுவதும், குற்றஞ் சாட்டுவதும் உங்கள் வழக்கமாகப் போயிற்று.

உங்களின் போராட்டத்திற்காகக் கூடிய மக்களின் எழுச்சி கண்டு, அரசியல்வாதிகள் உங்களைச் சூழத் தொடங்கினார்கள். நீங்களும் அவர்களைக் கைவிரித்து வரவேற்றீர்கள். முதலில் எம்.பி.மார்களோடு உறவு பாராட்டினீர்கள். பிறகு அமைச்சர்களோடு உறவு பாராட்டினீர்கள். பிறகு ஜனாதிபதி, ஜனாதிபதி வேட்பாளர் எனப் பலரோடும் உறவு பாராட்டினீர்கள்.

ஆனால், உங்களின் அந்த உறவெதுவும் நிலைத்துத் தொடரவில்லை. அவர்களைப் பாராட்டிய வார்த்தைகளின் ஈரம் காய்வதற்கு முன்பாக, அவர்களை உங்களின் வாய் தூற்றித் தள்ளியது. 'ஊரொடு பகைக்கின் வேரொடு கெடும்' எனும் பழமொழியை மறந்து போனீர்கள்.

எவரோடும் உங்கள் உறவும், நட்பும் தொடர்ந்ததாய்த் தெரியவில்லை. உங்களின் உண்மை முகம் தெரியாமல், அப்பாவிகளான நம் மக்கள் சிலர் தந்த ஆதரவும், நம் இனத்தின் பிழைகளை வளர்த்து விடுவதற்கென்றே இருக்கின்ற, சில புலம் பெயர்ந்தோர் தந்த ஆதரவும் உங்களை ஆணவத்தின் உச்சிக் கொம்பிற்கு ஏற்றிற்று.

'நானெனும் ஆணவம் தள்ளலும் – இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் – பர
மோனநிலையில் இருத்தலும் – ஒரு
மூவகைக் காலம் கடத்தலும் – நடு
ஆன கருமங்கள் செய்தலும்– உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும் – பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதிலும் – தனது
உள்ளம் அருளில் நெகுதலும் – இவை
தாயின் வயிற்றிற் பிறந்தன்றே – தமை
சார்ந்து விளங்கப் பெறுவரேல் – இந்த
மாயிரு ஞாலம் அவர் தமைத் – தெய்வ
மாண்புடையார் என்று போற்றுங்காண்'

– என்று தலைமைக்கான இலட்சணத்தை பாரதி அன்றே பாடிப் போனான்.

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

இதெல்லாம் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? மேற் சொன்ன பண்புகளில் எந்த ஒன்றையும் உங்களிடம் காண முடியாமல் போனதல்ல, மேற் சொன்னவற்றிற்கு நேர் எதிரான பண்புகள் உங்களிடம் ஆழப் பதிந்திருந்தமைதான் துரதிர்ஷ்டம்!

தற்செயலாய் அடித்த பந்தொன்று 'சிக்ஸர்' எல்லையைக் கடக்க, இனி, தான் அடிக்கும் பந்தெல்லாம் 'சிக்ஸர்' எடுக்கும் என நினைந்து, தாறுமாறாய்த் துடுப்பை வீசி வேகமாய் 'அவுட்' ஆன ஒரு கிரிக்கெட் வீரனைப் போல உங்களின் கதை ஆகிவிட்டது.

உங்கள் மதிப்பை உயர்த்துவதற்காக, மற்றவர்களின் பிழைகளைத் தேடித் திரிந்தீர்கள். நான் ஒருவனே யுகந்தொறும், யுகந்தொறும் தமிழினத்தைக் காக்க வந்த அபாய ரட்சகன் என்பதாய்க் கற்பனை வளர்த்தீர்கள். அந்தப் பிழையான எண்ணம் 'ஜெயில்' வரை உங்களைக் கூட்டிச் சென்ற பிறகும் நீங்கள் திருந்தியபா-டாய் இல்லை.

உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. வெளிநாடுகளில் சுகவாழ்வு வாழ்ந்து கொண்டு, நம் இனத்திற்காய்ப் போலிக் கண்ணீர் வடித்து வரும் சில சுயநல ஓநாய்களுக்கு, உங்கள் பொய்மை நன்றாய்ப் பிடித்துப் போயிற்று. அவர்கள் உங்களைப் பிரபாகரனின் அடுத்த அவதாரம் என்று நினைக்கத் தொடங்கினார்கள். அதனால் தம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதமான பணத்தை அள்ளி, உங்களை நோக்கி அவர்கள் வீச, உங்கள் உற்சாகம் கொப்பளித்துக் கிளம்பத் தொடங்கியது.

பொழுதுபோக்குக் 'கிளப்புகளில்', பார்வையாளர்கள் பணத்தை அள்ளி வீச, உற்சாகம் பெற்று, மேலும் மேலும் உடை உரித்து ஆடும் 'காபரே டான்ஸர்கள்' போல, அவர்கள் பணத்தால் உங்கள் ஆட்டமும் மிதமிஞ்சத் தொடங்கியது.

பல நாடுகளிலும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கி, வருமானத்திற்கு வழி செய்து கொண்டீர்கள். ஒரு அம்மணி உங்களுக்குக் கார் வாங்கித் தந்ததாகக் கூடப் பேசிக் கொண்டார்கள். இப்படியாய் சுகமாக வருமானங் கொட்டத் தொடங்க, வேலை போனது பற்றிக் கூட நீங்கள் சிறிதும் கவலைப்படவில்லை. உங்களின் அச் செயலையே தியாகத்தின் எல்லை என்றார்கள் சில மூடர்கள்.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல, தேர்தலில் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு உற்சாகமாகக் குதித்தீர்கள். நல்லவர்கள் ஏமாளிகளாக இருப்பதுதான், இங்கு நடக்கும் கொடுமைகளில் மிகப்பெரிய கொடுமை. அண்மையில் ஒரு 'யூடியூப்' விவாதத்தில், முன்னாள் முதலமைச்சர் அணியில் வேட்பாளராய் பங்கேற்கும் ஒருவர் வாதிட வந்தார். பார்க்கக் கண்ணியமாகத் தெரிந்த அந்த மனிதர் பேசும்போது 'முன்னாள் முதலமைச்சரின் நேர்மைபற்றி உங்களுக்குத் தெரியும் தானே' என்கிறார். அவரின் அப்பாவித் தனத்தைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டேன்.

அப்படித்தான் அப்பாவியான நல்லவர்கள் சிலர், உங்களோடு சேர்ந்து தேர்தலில் குதித்துவிட்டு, உங்கள் கூத்துக்களால் மனம் உடைந்து போய் இருக்கிறார்கள். அவர்கள் பற்றியெல்லாம் உங்களுக்குச் சிறிதும் கவலையில்லை. தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கும் நிலையில், நீங்கள் அடிக்கும் கூத்துக்களை ஒரு பைத்தியகாரன் கூடச் செய்யமாட்டான் என்பது மட்டும் சத்தியமான உண்மை.

ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்! நம்மினம், தலைவர்களிடம் தனிவாழ்வுத் தூய்மையை எதிர்பார்க்கும் இனம். அது கூட உங்களுக்குத் தெரியவில்லை. அண்மையில் வெளிவந்த முகநூல் காணொளி ஒன்றில், நீங்கள் இப்போது உங்களோடு (தேர்தலில்) இணைத்துக் கொண்டிருக்கும், 'கௌசி' என்கின்ற பெண்ணின் காதலன் என்று சொல்லப்படும் ஒருவன், உங்களோடு உரையாடிய பேச்சு வெளியாகியிருந்தது. அதைக் கேட்டு அதிர்ந்து போனேன்.

அவ் உரையாடலில், 'கௌசி என்கின்ற தங்கம், இப்ப என்னோடு தான் இருக்குது. நீ அவளைக் கல்யாணம் முடிக்காட்டி, நான் அவளைக் கல்யாணம் முடிப்பேன்' என்று நீங்கள் சொல்ல, அதைத் தாங்கமாட்டாத அந்த இளைஞன், 'ஐயோ.ஓ.ஓ.ஓ! டொக்டர் அப்படிச் சொல்லாதையுங்கோ! கௌசி இல்லாட்டி நான் செத்துப்போவன்' என்று நாபிக் கமலத்திலிருந்து சத்தமிட்டுக் கதற, நீங்கள் வெகு 'கூலாக', 'செத்துப் போடா' என்று பதிலுரைப்பதைக் கேட்டுப் பதறிப் போனேன். அதற்கு அடுத்ததாக வந்த காணொளியில் நீங்கள் அவனோடு பேசிய தூய(?) வார்த்தைகளை நான் இவ்விடத்தில் எழுதுதல் தகாது.

எனக்கு ஒன்று புரியவில்லை. பொதுவாகக் குற்றம் செய்தவர்கள் கூட, தேர்தலில் போட்டியிடும் போது அக் குற்றங்களை மறைக்கத்தான் பார்ப்பார்கள். நீங்களோ, தேர்தலுக்கு இன்னும் 15 நாள்கள் இருக்கையில், கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் உங்கள் பிழைகளைப் பொது வெளியில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த அசிங்கத்தைக் கண்டு உங்களை நம்பிய மக்கள் வேதனையால் தலைகவிழ்ந்து நிற்கிறார்கள். உங்களை நம்பித் தேர்தலில் போட்டியிடவென வந்த நல்லவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள்.

ஒன்றைமட்டும் உறுதியாகச் சொல்லலாம். இம்முறை தேர்தலில் நீங்கள் தப்பித் தவறியேனும் வெற்றிபெறுவீர்களேயானால், ஈழத் தமிழ் இனம் அழியப்போகிறது என்பதற்குக் கட்டியம் கூறும் வெற்றியாகத்தான் அவ் வெற்றி அமையும் என்பது நிச்சயம்.

அத்தகைய ஒரு வெற்றி, தவறியேனும் உங்களுக்கு வந்தால், தமிழ்மக்கள் தம் தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்ளத் தயாராகிவிட்டார்கள் என்றுதான் அர்த்தப்படுத்த வேண்டியிருக்கும். யார் கண்டது? எத்தனையோ பிழைகளைக் கண்ட பிறகும் நீதியரசருக்கும், 'உதயன்' அதிபருக்கும் வெற்றிகளைத் தந்த மக்கள், உங்களுக்கு வெற்றியைத் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லைதான்.

# தமிழர் தாயகப் பகுதிகளில் பொருளாதார மீட்சி எப்போது?

**ஜூட் பிரகாஷ்**
**(மெல்பேர்ண்)**

"It's the economy, stupid"..... பொருளாதாரம் எனும் கெட்ட வார்த்தை.

தமிழர் தாயகப் பகுதிகள் பொருளாதார ரீதியில் இலங்கைத் தீவில் பின்தங்கிய பகுதிகளாகவே விளங்குகின்றன.

யுத்தம் நடந்து கொண்டு இருக்கையிலும், தென்னிலங்கை அதிவேகமாக பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்தது என்பது நாம் கேட்க விரும்பாத கசப்பான உண்மை.

சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை அடைந்த அபரித மான பொருளாதார முன்னேற்றம், மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் வாங்கிய அளவுக்கு மிஞ்சிய கடன்களாலும், நாட்டையே விழுங்கிய ஊழல்களாலும், கோட்டாவின் ஆட்சியில் வங்குரோத்து நிலைமையை அடைந்தது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிலவிய, நிலவும் அவலமான பொருளாதார சூழ்நிலையிலும், பொருளாதார அபிவிருத்தி என்ற கெட்ட சொல்லை தமிழ் அரசியல் பரப்பில் பாவிப்பதே ஒரு குற்றமாக கருதப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தி என்பது பென்னாம் பெரிய தொழிற்சாலைகள் கட்டுவதும், அதிவேக சாலைகள் அமைபதும், அதன் விளைவான சுற்றுச் சூழல் மாசுபடுதலும், கலாச்சார சீரழிவும் என்று தமிழ் சமுதாயத்தை ஒரு குறுகிய வட்டத்திற்குள் யாரோ அடைத்து வைத்துவிட்டார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எங்கள் விழுமியங்கள் அழியாது, எங்கள் கலாச்சாரத்தைப் பேணிக் கொண்டு, எங்கள் சுற்றுச் சூழலை பாதுகாத்துக் கொண்டு, நாங்கள் பொருளாதார அபிவிருத்தி எனும் பாதையில் நடக்கலாம், நடக்கத் தொடங்க வேண்டும். விவசாயம், கடற்தொழில், IT தொழில்நுட்பம் மற்றும் medical & eco tourism எனும் நான்கு துறைகளை தூண்களாகக் கொண்டு எமது பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்பப்படலாம். கிராமங்களை மையமாகக்கொண்டு, உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவல்ல, அயலட்டை மக்களிற்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவல்ல, விவசாய மற்றும் கடற்தொழில் சார்ந்த தொழில் முயற்சிகள், சுற்றுச்சூழலையும் பாதிக்காது, பெரிய முதலீடுகளிற்கும் தேவையிருக்காது.

> எங்கள் விழுமியங்கள் அழியாது, எங்கள் கலாச்சாரத்தைப் பேணிக் கொண்டு, எங்கள் சுற்றுச் சூழலை பாதுகாத்துக் கொண்டு, நாங்கள் பொருளாதார அபிவிருத்தி எனும் பாதையில் நடக்கலாம், நடக்கத் தொடங்க வேண்டும். விவசாயம், கடற்தொழில், IT தொழில் நுட்பம் மற்றும் medical & eco tourism எனும் நான்கு துறைகளை தூண்களாகக் கொண்டு எமது பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்பப்படலாம்.

எங்கள் ஊர்களில் நிறைந்திருக்கும் பொறியியலாளர்களின் அறிவைப் பயன்படுத்த தொழில்நுட்பம் சார்ந்த தொழிற்துறைகளும், எங்கள் திறமையான வைத்தியர்களை நம்பி medical tourism உம் எங்கள் தாயக மண்ணில் நன்றாகவே விதைவிட்டு வளரும். தாயகப் பூமியெங்கும் நிறைந்திருக்கும் இயற்கை அழகை அழிக்காமல் eco tourism உம் நல்ல முறையில் நிலை கொள்ளும். இந்த முயற்சிகள் எதுவுமே பாரியளவில் செய்ய வேண்டியதில்லை.

தொடர்ச்சி▼



# தமிழர் தாயகப் பகுதிகளில் பொருளாதார மீட்சி எப்போது?




தொடர்ச்சி▲

"சிறியதும் அழகுதான் (small is also beautiful)" எனும் கருப்பொருளைத் தழுவி, சிறிய முயற்சிகளாகவே அவை முன்னெடுக்கப்படலாம். பல பல சிறிய முயற்சிகள் முளைவிடத் தொடங்க, எங்களது சமூக பொருளாதார அபிவிருத்தி இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கிவிடும்.

அதேவேளை, போரின் காரணமாக புலம்பெயர்ந்து, தங்களையும் பலப்படுத்திக் கொண்டு, போராட்டத்திற்கும் பலம் சேர்த்த ஒரு தலைமுறை, "நாட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டும்" எனும் இன்னும் நிறைவேறாத வேட்கையுடன், முதுமையை நோக்கியும் மரணத்தை நோக்கியும் பயணித்துக் கொண்டிருக்கிறது. 1950 களிலிருந்து 1970 கள் வரையில் பிறந்த இந்த தலைமுறைகள் தான், போரால் அழிவுண்ட எங்கள் தேசத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய நிபுணத்துவத்தையும் நிதிவளங்களையும் தம்மகத்தே கொண்டிருக்கிறது. தாயகத்தை நேசித்துக் கொண்டு, புலம்பெயர் தேசத்தில் வாழும் இந்தத் தலைமுறையை எங்களின் தேசத்தின் மீள்நிர்மாணத்திற்கு களமிறக்க வேண்டிய காலமிது.

எங்கள் தேசத்தை ஆழமாக நேசிக்கும் இந்தத் தலைமுறைக்குப் பின்னர் வரும் தலைமுறைகள், இந்தத் தலைமுறைக்கு இருக்கும் அதேயளவு பற்றுடன் தாயகத்திற்கு உதவி செய்யப் போவதில்லை.

போரிற்கு பின்னரான காலப்பகுதியில் எங்களது பலமாக விளங்கும் புலம்பெயர் சமூகத்தை, எங்கள் தாயகத்தின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்ப பயன்படுத்தப் போகிறோமா? இல்லை காலம் அவர்களையும் காவு கொள்ள விட்டு விடப்போகிறோமா?

2022 ஆண் ஆண்டில் வங்குரோத்து நிலைமையை எட்டிய இலங்கையின் பொருளாதாரம், வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய பொருளாதார நிபுணர்களின் பங்களிப்புடனும், இலங்கையின் மிகத்திறமையான அரச பொருளாதார அதிகாரிகளின் செயற்பாட்டாலும் மீளெழத் தொடங்கிவிட்டது. இலங்கையின் பொருளாதார மீளெழுச்சிக்கு இந்தியாவும், அமெரிக்காவும், ஜப்பானும், சீனாவும் உதவ முண்டியடிக்கின்றன. சீரழிந்து போன இலங்கையின் பொருளாதாரம் எப்படியும் இன்னும் சில ஆண்டுகளில் மீட்சி கண்டுவிடும்.

ஆனால், எங்களின் பிரதேசங்களின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியமைக்கும் பொறுப்பு எங்களைச் சார்ந்ததல்லவா? எங்களிடம் இருக்கும் இயற்கை வளங்களையும், தாயகத்திலும் புலத்திலும் இருக்கும் நிபுணத்துவத்தையும், உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் எங்கள் சொந்தங்களின் பொருளாதார பலத்தையும் முதலீடாக்கி, எங்களை நாங்களே அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்லத் தடையாக இருப்பது நாங்கள் அல்லவா?

அவர்கள் காலத்தில் இருந்தது போல், வெளிநாடுகளிலிருந்து வரும் நிபுணர்களை ஒருங்கிணைத்து திட்டங்களை செயற்படுத்தும் பலமான கட்டமைப்புக்கள் தாயகத்தில் இல்லாத இன்றைய சூழ்நிலையில், புலத்தில் வாழும் எங்கள் நிபுணர்களின் மீள்வருகையும், அவர்களின் பங்களிப்பையும் உள்வாங்குவதற்குமான கட்டமைப்பை ஏற்படுத்த, வடக்கு கிழக்கில் ஒரே அணியாக போட்டியிடும் தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி முன்வரவேண்டும்.

தமிழரசுக் கட்சியானது, தமிழர்களின் அரசியல் தீர்வு முயற்சிகளிற்கு மட்டுமன்றி, சமூக பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களிற்கும் தலைமைத்துவம் வழங்கவேண்டியது காலத்தின் கட்டாயம். பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கான சரியான செயற்பாட்டுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்த தமிழரசுக் கட்சி முன்வரவேண்டியதும், எங்கள் நிகழ்கால இருப்பைத் தக்கவைக்கவும், எங்கள் இளைய சமுதாயத்தின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்குமான, உடனடி அவசரத் தேவையாக உள்ளது.




# யாருக்கு வாக்களிப்பது? மக்களை வாட்டும் வினா!



வி.எஸ்.சிவகரன்

“அரசியல் என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம்“ என்ற மாக்கியவல்லியின் கூற்றையும் “நாடாளுமன்றம் என்பது பன்றிகளின் தொழுவம்“ என்ற லெனினது கூற்றையும் மெய்ப்பிக்கும் வகையிலே 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் களம் காணப்படுகிறது.

அரசியல் என்பது மக்களினுடைய அடிப்படை உரிமைகளையும் அற இருப்பையும் தற்காத்துக் கொள்வதற்காக தன்னலமற்ற சேவை செய்வது ஆகும். ஆனால் இன்று உலகம் முழுவதும் அரசியல் என்பது சாக்கடையாகக் காணப்படுகிறது. நல்லவர்கள், வல்லவர்கள், நேர்மையானவர்கள், விசுவாசமானவர்கள் இந்த அரசியல் அரங்கிலே – அதிலும் குறிப்பாக தேர்தல் அரசியலிலே – ஒருபோதும் நின்று நிலைக்க முடியாது. ஜனநாயகம் என்பது போக்கிலித்தனத்தின் அதிஉச்சச் செயல்பாடாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அதை தீர்மானிப்பது பணநாயகமே. அதனாலேயே அது வகுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வசதி உள்ளவர்கள் மாத்திரமே அரசியலிலும், தேர்தல் அரசியலிலும் பங்கு பெறலாம் என்கின்ற எழுதப்படாத விதி உலகம் முழுவதும் வியாபித்து வருகிறது. நீதி பூர்வமானவர்கள் தேர்தலிலே இலகுவாக வெற்றி பெறுவது என்பது குதிரைக்கொம்பாகவே இருக்கிறது. சூட்சியும், ஏமாற்றும், போக்கிலித்தனமும் அரசியலின் பங்குதாரர்கள். குறிப்பாக அரசியல் என்றாலே உண்மையின் நிழல் படாத பொய்யையே. உண்மை போல் உரைக்க வேண்டும். நீதி, அறம், சத்தியம், நேர்மை, உள்ளதை உள்ளபடி பேசுதல் – இவை எல்லாம் முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும். முழுக்க முழுக்க சமயோசித சந்தர்ப்பவாதிகளாகவே இருக்க வேண்டும். அப்படித்தான் பலர் இருக்கிறார்கள். தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் எவ்வளவு பொய்மைக்குள் தள்ளாடுகிறதோ அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அரசியல்வாதிகளும் தங்கள் பொய்யையும், புரட்டையும் இலாபகரமாக மக்கள் மத்தியிலே விதைத்துச் செல்கின்றனர்.

ஆகவே இவ்விதமானவர்கள் பதவிக்கு வந்து மக்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? பணமும், மதுசாரமும் தாராளமாக புரளுகின்றன. எண்ணற்ற சுயேச்சைக் குழுக்கள். இவர்களால் என்ன பயன்? தான் எதற்காக இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்று கூட பலருக்கு தெரியவில்லை. யார், யாருடைய விருப்பங்களுக்காகவோ எல்லாம் பலர் பெயரிடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் வெளிநாடு போவதற்காக தேர்தல் அடையாள அட்டை பெறுவதற்காகவும் தேர்தலில் போட்டியிடுகின்றார். புலம்பெயர்ந்த பின்னணியிலும் சில சுயேச்சைஜ் குழுக்கள் போட்டியிடுகின்றன. சிங்கள கட்சிகளிலும் தமிழர்கள் முண்டியடித்துப் போட்டியிடுகிறார்கள். இலங்கை வரலாற்றில் இதுவரையில் இவ்வாறான ஒரு கேவலமான தேர்தல் நடந்ததாக இல்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலே அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாகியமையே மாற்றம் என்கின்ற கோசம் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்குவதற்கு வழிகோலியுள்ளது. கடந்த காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட இவ்வாறானதொரு பிற்போக்குத்தனமான அரசியல் நெருக்கடி இருந்ததில்லை. ஏனெனில் அதை விடக் கட்டுப் பணம் இதற்குக் குறைவு என்பதனால் பொழுதுபோக்கிற்காக வேட்பாளர் ஆகியுள்ளனர். இளைஞர்கள் தங்கள் முகங்களைப் பிரபலப்படுத்தி ஹீரோயிஸம் காட்டுவதற்காகவும்

தொடர்ச்சி ▼

# யாருக்கு வாக்களிப்பது? மக்களை வாட்டும் வினா!

தொடர்ச்சி▲

முண்டியடிக்கின்றனர். ஏலவே நடைபெற்ற தேர்தல்களில் சுயேச்சை குழுக்களை ஆட்சியில் உள்ளவர்களே நிறுத்தி வந்தனர். அந்த நிலை முழுமையாக மாறிவிட்டது. காசு இருந்தால் களத்துக்கு வரலாம் என்கின்ற பிந்திய தத்துவமாக நிலைமை மாற்றமடைந்து விட்டது.

பல்வேறு விதமான சர்ச்சைகளுக்குள் தனது முதிர்ச்சியற்ற வார்த்தைகளால் அகமுரண்பாட்டின் மொத்த வடிவமாக உள்ள திரள்வது மிகக் கேவலமான ஒன்றாகும்.

தேர்தலிலே போட்டியிடுவதற்கும் ஏதோ ஓர் அடிப்படை வேண்டும். இந்த மக்களுக்காக எவ்விதமான தேசாபிமான பணியும் மேற்கொள்ளாதவர்கள் புதிது புதிதாக களத்துக்கு வருவதனால் மக்கள் மத்தியிலே பல்வேறு விதமான குழப்பங்கள் காணப்படுகின்றன. ஏமாற்றியும், பிற்போக்குத்தனத்திலும், முறையற்ற வணிகத்திலும், போதைப்பொருள் வியாபாரத்தியிலே பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் களங்காணுகின்ற நிலைப்பாடு உள்ளதனால் மக்களுக்கு யாருக்கு வாக்களிப்பது என்பதிலேயே பல கேள்விகள் எழுந்துள்ளன.

படித்தவர்கள் தொடக்கம் சாமானியர்கள் வரைக்கும் நாளாந்தம் பேசுகின்ற ஒரே வாசகம் "யாருக்கு வாக்களிப்பது?" அனேகமாக வேட்பாளர், வேட்பாளரின் ஆதரவாளர்கள் கடந்த எல்லோருக்கும் உள்ள வினா இதுதான். அரச ஊழி



சாவகச்சேரியின் முன்னாள் வைத்தியரும் களத்துக்கு வந்து கோமாளி கூத்துப் போடுகிறார். அவருக்கு கோடிக்கணக்கான பணத்தை புலம்பெயர்ந்து தேசத்தில் உள்ள முட்டாள் சமூகம் வழங்கி வருகிறது. இங்கே வறுமையின் உச்சத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக முன்னாள் போராளிகள், விழுப்புண்ணடைந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் நாளாந்த வாழ்வியலை நகர்த்த முடியாமல் தத்தளிக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் மறந்துவிட்டு மிக மோசமான சமூகப் பிறழ்வில் உள்ள அந்த வைத்தியருக்கு பின்னால் புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ள பலர் அணிலும், போதைப் பொருளை தற்காப்பதிலும் பெற்றுக் கொண்ட பணத்தை தேர்தல் அரசியலில் பயன்படுத்துகிறார்கள். ஊழலுக்கு எதிரான தூயவாதம் பேசிய தேசிய மக்கள் சக்தியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அவர்களுடைய வேட்பாளர்களும் பல்வேறு விதமான குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள். அத்தகையவர்களையே வேட்பாளர்கள் ஆக்கியுள்ளனர்.

தேர்தல் அரசியல் என்று வந்துவிட்டால் உலகில் எங்கும் தூய வாதம் என்பது காணாமல் போய்விடும்.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளுக்குள் இருக்கின்ற பதவிச் சண்டையும் தலைமைத்துவமின்மையும் போட்டா போட்டியும் நிலவும் நிலையில் அதற்கு மத்தியர்கள் தபால் மூல வாக்களிப்பிலே பலர் யாருக்கு வாக்களிப்பது எனத் தடுமாறியமையைக் காணக் கூடியதாக இருந்தது. ஏனெனில் அந்த அளவுக்கு தெரிவு செய்யக்கூடிய நிலையில் எந்தக் கட்சியும் ஒழுங்கில்லை, எந்த வேட்பாளர் அணியும் ஒழுங்கில்லை என்பதே பலரது பொது அபிப்பிராயமாக காணப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கொள்கை என்பது இந்த தேர்தலில் பெரிய அளவில் பேசு பொருளாக காணப்படவில்லை. ஒரு மூத்த வைத்தியர் சில தினங்களுக்கு முன்னர் தபால் மூலம் வாக்களிக்கும் போது யாருக்கு வாக்களிப்பது என அழைத்தார். பலவித

தொடர்ச்சி▼



# யாருக்கு வாக்களிப்பது? மக்களை வாட்டும் வினா!

**தொடர்ச்சி▲**

மானபுராணம்பாடினார். முடிவிலே எல்லோரும் ஏமாற்றுக்காரர்கள், கட்சி சின்னத்திற்கு மட்டும் நான் வாக்களிக்க போகிறேன் என்றார்.

இன்னும் ஒரு அதிபர், தங்களின் இரண்டு தபால் மூலம் வாக்கிற்கும் ஐயாயிரம் ரூபாய் படி பணம் தந்தால் நாம் எவருக்கும் வாக்களிப்போம் என்றார்.

இன்னொரு ஊர் தலைவர் தனது கோயிலுக்கு 10 லட்சம் ரூபா தருபவர்களுக்கு ஊரில் உள்ள 230 வாக்குகளையுன் வழங்குகின்றோம் என வந்த வேட்பாளர்களுக்கு கூறியுள்ளோம், எவரும் இணங்கி முன் வருபவர்களாகத் தெரியவில்லை என்றார்.

இப்படி எல்லோர் மத்தியிலும் பல்வேறு விதமான கேள்விகள் உள்ளன. இதனால் சிலர் வாக்களிக்காமல் விடப்போகிறார்கள எனவும் கூறுகின்றனர்.

2015 நல்லாட்சி அரசோடு இணைந்து கூட்டமைப்பு தமிழ்த் தேசிய நீக்கம் செய்ததன் பின்னர் மக்கள் மத்தியிலே இவ்விதமான மாற்றம் எழ ஆரம்பித்து. 2024 தேர்தலில் அது உச்சம் பெற்றிருக்கிறது. இதனுடைய முழு பங்குதாரர்கள். பொறுப்பு சம்பந்தன் - சுமந்திரனையே சாரும். ஆனால் கட்சிகள் அதிகம் என்பதனால் மக்கள் மத்தியிலே இருக்கிற விரக்தி வீட்டுகாரர்களுக்கு கொஞ்சம் வாய்ப்பு அதிகமாக ஏற்படப் போகிறது.

குழப்பத்தில் இருக்கின்ற பலர் சின்னத்திற்கு மட்டும் வாக்களிக்கலாம் என்கின்ற வாதத்தையும் முன்வைக்கிறார்கள். அதனால் ஒரு தரப்பு வடக்கு கிழக்கில் முன்னியை வாக்கு பெறக்கூடிய கள நிலமை ஏற்படலாம். அவர்கள் கட்சியின் தலைவர்களின் படத்தை கூடப் போட்டு நோட்டீஸ் பதாதை அடிப்பதற்கு கூட தயங்குகிறார்கள். பெரும்பாலான சுவரொட்டிகளில் எந்த தலைவர்களுடைய படமும் காணவில்லை. 70 ஆண்டுகளைக் கடந்த கட்சிக்கு - தமிழ்த்தேசிய அரசியலிலே மிக பெரிய பங்கு வகித்த கட்சி என்று பெயர் எடுத்த தரப்புக்கு - நோட்டிஸ்க்குத் தலைவரின் படத்தைப் போடுவதற்குக் கூட ஒரு தலைவர் இல்லாத பரிதாப நிலைமை உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான மூன்றாம் தர தேர்தல் கள அரசியல் நிலைவரம் தொடருமாக இருப்பின் ஒருபோதும் நல்லவர்கள், வல்லவர்கள் இந்தத் தேர்தல் களத்திற்கு கிஞ்சித்தும் வர மாட்டார்கள். ஆகவே அயோக்கியர்களின் கூடாரமாகவே அரசியல் தொடர போகிறது என்பதற்கு இந்தத் தேர்தல் நிலைமை சிறந்த எடுத்துக்காட்டு.

எல்லோருக்கும் வாக்கு போட்டு நம்பி ஏமாந்து நடுத்தெருவுக்கு வந்து விட்டார்கள் மக்கள். அந்தக் கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில்தான் மக்கள் மத்தியிலே வாக்களிப்பதற்கு விரக்தியும் அச்சமும் நீடிக்கின்றன.

இவற்றையெல்லாம் நீக்கி, ஒரு தேசமாக தமிழ்த்தேசியத்தின் கோட்பாட்டு சித்தாந்தத்தை ஒருமித்த குரலில் நிலை நிறுத்தி, மக்களை அணி திரட்ட கூடிய வல்லாண்மையுள்ள தலைவர் வெளிக் கிளம்பாத வரை இந்த நிலைமை நீடிக்கும்.

இந்த மூன்றாம் தர அரசியல் களத்தில் மக்கள் மத்தியிலே பிறழ்வை ஏற்படுத்தி, ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும், கூட்டுணர்வையும் சிதைக்கின்ற வேலையை ஏற்படுத்தும் - பொது நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்ட - அரசியல்வாதிகள் தங்கள் முகமூடிகளை கழற்றி விட்டு இனியாவது மக்களுக்காக உண்மையாக நேர்மையாக செயலாற்ற வருவார்களா? அப்படி வரக்கூடிய எவரும் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை, அவ்வாறான கட்சி எதுவும் இல்லை எனவும் மக்கள் மத்தியிலே உள்ள விரக்திக்கு பதிலளிப்பது யார்?

ஆகவே யாருக்கு வாக்களிப்பது? ஏன் வாக்களிப்பது? வாக்களிப்பதனால் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? - இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடிய எந்தக் கட்சியும் களத்தில் இல்லை. எந்த வேட்பாளரும் தயாராக இல்லை.

வெறுமைக்குள் சிக்கித் தவிக்கிறான் வாக்காளன். வெற்று கோசத்தோடு நடுத்தெருவில் அரசியல் தரப்புகள். சந்தி சிரிக்கிறது. தமிழ் தேசிய அரசியலைக் காக்கப் போவது யார்?

அந்த ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்...!